**செ. கு. எண்: 212** **நாள் : 18.11.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின்
அறிக்கை - 18.11.2014

---

முல்லைப் பெரியாறு பிரச்சனையில் தேவையின்றி அறிக்கைப் போர் தொடுத்து தமிழக மக்களின் நலன்களுக்கு எதிராக செயல்படும் திமுக தலைவர் திரு.கருணாநிதி, 'முல்லைப் பெரியாறு பிரச்சனையில் கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் மனு - தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் முயற்சியில் முதலமைச்சர் ஈடுபடவேண்டும்!'" என மீண்டும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். முல்லைப் பெரியாறு பிரச்சனையில் தமிழர் நலனையும், தமிழக விவசாயிகளின் நலன்களையும் பாதுகாத்து தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். எனவே தான், முல்லைப் பெரியாறு அணையில் இன்றைக்கு **141** அடிக்கு மேல் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதைக் கண்டு பொறுக்க முடியாமல், திமுகவினாலும், தன்னாலும் சாதிக்க முடியாததை, ஏன் கனவிலும் நினைக்க முடியாததை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதித்துக் காட்டிவிட்டார்களே என்ற ஆதங்கத்தில் ஒரு தரமற்ற அறிக்கையை வெளியிட்டுள்ளார் திரு.கருணாநிதி. முல்லைப் பெரியாறு பிரச்சனை தொடர்பாக திரு.கருணாநிதி எவ்வளவு அறிக்கைகளை வெளியிட்டாலும், இந்தப் பிரச்சனையில் தமிழக மக்களுக்கு, குறிப்பாக **5** மாவட்ட விவசாயிகளுக்கு திமுகவும், திமுக அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசும் தொடர்ந்து துரோகம் இழைத்து வந்ததை மறைத்து விட இயலாது.

**7.11.2014** அன்று திரு.கருணாநிதி பொய்யான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கைக்கு பதில் அறிக்கை ஒன்றை நான் விடுத்தேன் என்றும், ஆனால் கேரள அரசின் முயற்சிகள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என்றும் மீண்டும் வீண்பழி ஒன்றை சுமத்தியுள்ளார் திரு.கருணாநிதி. அதில், முல்லைப் பெரியாறு அணை குறித்து கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் மனு செய்ததைக் குறிப்பிட்டு, அடுத்த மாதம் கேரள சட்டப்பேரவைக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு நீர்மட்டத்தினை உயர்த்தும் நடவடிக்கையைத் தடுக்க சட்ட மசோதாக்களை கொண்டு வர கேரள அரசு திட்டமிட்டுள்ளது எனக் கூறி மீண்டும் தமிழகத்திற்கு வஞ்சகம் இழைத்துள்ளார். முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டத்தை **142** அடி வரை தேக்கிவிடக் கூடாது, அவ்வாறு தேக்கிவிட்டால் **5** மாவட்ட விவசாயிகளிடம் தனது மாய்மாலம் எதுவும் எடுபடாது என்பதால், புதிய சட்ட மசோதாக்களை கேரள அரசு கொண்டு வராதா, அதன் மூலம் தான் அரசியல் ஆதாயம் தேட இயலாதா என்ற நப்பாசை தான் இதில் தெரிகிறது. மேலும், இப்பிரச்சனை தொடர்பாக பிரதமருக்கு இது பற்றி கடிதம் ஒன்றை எழுதியதோடு தன் கடமை முடிந்து விட்டதாக நான் இருந்து விட்டேன் என்ற ஒரு பொய்யை இடையே அவிழ்த்து விட்டிருக்கிறார் திரு.கருணாநிதி. முல்லைப் பெரியாறு அணையில் முதல் கட்டமாக **142** அடி வரை தண்ணீரை தேக்கிக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு அளித்துள்ள நிலையில், நீர் மேலாண்மையினைக் கருத்திற் கொண்டு முல்லைப் பெரியாறு அணையின் நீரின் அளவு ஒழுங்குமுறை செய்யப்பட்டு வருகிறது. எனவே இது தொடர்பாக பாரதப் பிரதமருக்கு தற்போது எந்தவித கடிதமும் எழுத வேண்டிய அவசியம் இல்லை. உச்சநீதிமன்ற ஆணையை நடைமுறைப்படுத்துவது அனைத்து தரப்பினரின் கடமையாகும். இதை திரு.கருணாநிதி புரிந்து கொள்ள வேண்டும். இது குறித்து பாரதப் பிரதமருக்கு தற்போது கடிதம் எதுவும்

எழுதப்படவில்லை. ஏனெனில், முல்லைப் பெரியாறு தாவா தீர்க்கப்பட்ட ஒன்று. நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமான, உச்சநீதிமன்றத்திலேயே தமிழக மக்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றுத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, இந்த தீர்ப்புக்கு மேலும் கேரள அரசு எதுவும் செய்திட இயலும் என்ற ஒரு வீணான அச்சத்தை திரு.கருணாநிதி ஏற்படுத்த முயன்றால் முல்லைப் பெரியாறு நீரை நம்பியுள்ள ஐந்து மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் அவரை மன்னிக்க மாட்டார்கள்.

ஒவ்வொரு பிரச்சனையிலும் அந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் அதற்கு உரிய நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவர்களது வழியில் செயல்படும் அஇஅதிமுக அரசும் மேற்கொண்டு வருகிறது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த போது, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **136** அடியிலிருந்து **120** அடியாகக் குறைத்திட வேண்டுமென்று கேரள சட்டமன்றம் 9.12.2011 அன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய போது, தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வை வெளிப்படுத்தி, கேரள அரசுக்கு தக்க அறிவுரையை மத்திய அரசு வழங்கிட வேண்டும் என்ற காரணத்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15.12.2011 அன்று சிறப்பு சட்டமன்றக் கூட்டம் கூட்ட நடவடிக்கைகளை எடுத்து அந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

*“தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகளின் வாதங்களையும், வல்லுநர்களின் அறிக்கைகளையும் ஆராய்ந்து, அதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது என்பதால், அதன் நீர்மட்டத்தை **136** அடியிலிருந்து **142** அடியாகவும்; எஞ்சிய பலப்படுத்தும் நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட பின், **152** அடியாகவும் உயர்த்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் **27.2.2006** அன்று தீர்ப்பளித்த பிறகு, அந்த ஆணையை, இந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை, முற்றிலும் அவமதிக்கும் வகையில், “கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், **2006**”, என்ற சட்டத்தை இயற்றி அந்த சட்டத்திற்கு எதிரான மனு, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற உண்மைக்கு மாறான பிரச்சாரம் மூலம், கேரள மக்களிடையே பீதியை கிளப்பிவிட்டு, புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கேரள அரசு, வலியுறுத்தும் அதே நேரத்தில்; முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **120** அடியாக குறைக்க வேண்டும் என்று **9.12.2011** அன்று கேரள சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் இயற்றியுள்ள கேரள அரசு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது எனினும், அரசமைப்புச் சட்டத்தின்படி, ஏற்படுத்தப்பட்ட கேரள சட்டமன்றத்தை கண்டிப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது என்பதால், அந்தத் தீர்மானத்தின் மீது தமிழக மக்களின் வருத்தத்தினை தெரிவிப்பது என்றும்;*

*முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக, கேரள அரசு உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மேற்கொண்டு இருப்பதையொட்டி, தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதால், முல்லைப் பெரியாறு அணையை பாதுகாக்கும் பொருட்டு மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை,*

*அதாவது, Central Industrial Security Force–ஐ அந்தப் பகுதிக்கு உடனடியாக மத்திய அரசு அனுப்ப வேண்டும் என்றும்;*

*உச்ச நீதிமன்ற தீர்ப்பினை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **142** அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, **2006** ஆம் ஆண்டு, கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்;*

*அணையின் நீர்மட்டத்தை **152** அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசு, தமிழகத்திற்கு தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றும்;*

*எந்தச் சூழ்நிலையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது.”*

இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தான் முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த காங்கிரஸ் அரசை திரு.கருணாநிதி ஏன் அப்போது வற்புறுத்தவில்லை? இது போன்றே, இலங்கை தமிழர் பிரச்சனை, தமிழக மீனவர் பிரச்சனை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். முல்லைப் பெரியாறு அணையில், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, நீர் தேக்கி வைப்பதற்கு இது போன்ற தீர்மானங்கள் இன்றைய சூழ்நிலையில் அவசியமற்றதாகும்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக **142** அடி அளவுக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்று **7.5.2014** அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **142** அடி அளவுக்கு உயர்த்தப்படுவதை மத்திய நீர்வளக்குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் நியமிக்கப்படும் **3** உறுப்பினர்கள் கொண்ட மேற்பார்வைக்குழுவின் முன்னிலையில் உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமரை **3.6.2014** அன்று நேரில் சந்தித்து அணையின் நீர்மட்டத்தை **142** அடி அளவிற்கு உயர்த்துவதற்கு மேற்பார்வை குழுவினை உடனடியாக அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியதின் பேரிலேயே, மத்திய அரசு **1.7.2014** அன்று இக்குழுவை அமைத்தது. **17.7.2014** அன்று நடைபெற்ற இக்குழுவின் **2**ஆம் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **142** அடி அளவிற்கு உயர்த்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அன்றே அணையின் மதகுகள் கீழிறக்கப்பட்டன.

எந்தப் பிரச்சனையில் எந்த வித அணுகுமுறையை கடைபிடிப்பது என்பதில் திரு.கருணாநிதிக்கும், திமுகவிற்கும் தான் என்றைக்குமே குழப்பம். முல்லைப் பெரியாறு பிரச்சனை தொடர்பாக **5** பேர் கொண்ட குழுவினை உச்சநீதிமன்றம் அறிவித்த போது, அதில் இடம் பெறுவது பற்றி திரு.கருணாநிதிக்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது. அவரது குழப்பத்தை தீர்த்துக் கொள்ளக் கூடிய இடம் அவரது கட்சியின் பொதுக்குழுவோ, செயற்குழுவோ இல்லை என்றாலும், திமுகவின் பொதுக் குழுவில், தமிழக அரசின் சார்பில் ஐவர் குழுவில் இடம் பெறுவது தேவை இல்லை என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார் திரு.கருணாநிதி. ஒட்டுமொத்த தமிழக மக்களின் பிரச்சனையான முல்லைப் பெரியாறு பிரச்சனைக்கு திமுக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி விடை கண்ட அதிமேதாவி

திரு.கருணாநிதியின் அறிவுரை இந்த அரசுக்கு தேவையில்லை என்பதை அவருக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

திரு.கருணாநிதி தனது அறிக்கையில் கேரள அரசின் முயற்சிகள் பற்றி எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றும், உச்சநீதிமன்றத்தில் கேவியட் தாக்கல் செய்வது பற்றி முடிவு செய்யவில்லை என்றும் கூறியுள்ளார். கேவியட் மனு என்றால் என்ன என்பது பற்றி திரு.கருணாநிதிக்கு ஒன்றுமே தெரியாது என்னும் தனது அறியாமையைத் தான் அவர் இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், முல்லைப் பெரியாறு பிரச்சனை குறித்து உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு ஏற்கெனவே தாக்கல் செய்த சீராய்வு மனு பற்றியும் தனக்கு எதுவும் தெரியாது என்றும் வெளிப்படுத்தியுள்ளார். உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு 7.5.2014 அன்று வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து கேரள அரசு ஏற்கெனவே தாக்கல் செய்துள்ள சீராய்வு மனு உச்சநீதிமன்றத்தால் இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த சீராய்வு மனுவில் உச்சநீதிமன்ற தீர்ப்பினை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற எந்த கோரிக்கையும் கேரள அரசால் வைக்கப்படவில்லை. கேரள அரசு தற்போது உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் உச்சநீதிமன்றம் 7.5.2014 அன்று வழங்கிய தீர்ப்பில் பத்தி 223–ல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வைக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் அதன் பணிகள் குறித்தும் உச்சநீதிமன்றத்தின் முன் தெரிவித்து அதன் மீது விளக்கங்கள் அல்லது வழிமுறைகள் வழங்கும்படி அதன் இடைக்கால மனு பத்தி–1ல் கேட்டுக்கொண்டுள்ளது.

> "(1)This is an application filed by the State of Kerala seeking clarifications or guidance on para 223 of the judgment dated 7.5.2014 of the Constitution Bench of this Hon'ble Court in O.S.No.3 of 2006." – என்று கேரள அரசு தெரிவித்துள்ளது.

இத்தகைய மனு தாக்கல் செய்யப்படும் என்பதை எதிர்நோக்கி, தமிழ்நாட்டின் சார்பில் வாதிட்டு வரும் வழக்குரைஞர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தில் 'கேவியட் மனு' தாக்கல் செய்வது பற்றி உச்சநீதிமன்ற விதிகளில் உத்தரவு 18-ன் கீழ் விதி 2-ன்படி கூறப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தால் 7.5.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து, கேரள அரசு ஏற்கெனவே தாக்கல் செய்த சீராய்வு மனு இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில் தற்போது கேரள அரசால் தாக்கல் செய்யப்படும் மனுவின் மீது தமிழக அரசுக்கு எந்த வித அறிவிப்பும் அளிக்காமல் உத்தரவு ஏதும் பிறப்பிக்காது என்பதால் கேவியட் மனு எதுவும் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதை திரு.கருணாநிதிக்கு தெரிவித்துக் கொள்கிறேன். கேவியட் போன்ற சட்ட நுணுக்கங்கள் பற்றி எதுவும் தெரியாமல், அதைப் பற்றி அறிவுரைகள் வழங்குவதை திரு.கருணாநிதி இனி மேலாவது நிறுத்திக் கொள்வது அவருக்கும் நல்லது; நாட்டு மக்களுக்கும் நல்லது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 31.10.2014 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் 136 அடியை எட்டியது. 1.11.2014 அன்று வைகை அணையில் 2.4 டிஎம்சி அடி நீர் மட்டுமே இருந்தது. 3.11.2014 முதல் முல்லைப் பெரியாறு அணைக்கு வரும் நீர் குறைந்தும் அதிகரித்தும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது. வைகை அணையில் உள்ள நீர், முல்லைப் பெரியாறு அணைக்கு வரும் நீர்வரத்து ஆகியவற்றின் அடிப்படையில் நீர்

மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக திரு.கருணாநிதி முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் குறைக்கப்பட்டு 142 அடி வரை நீர் தேக்கப்படவேண்டும் என அறிக்கை வெளியிட்டு கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு வழி வகை செய்து விட்டார்.

இதே போன்று, காவேரியின் குறுக்கே கர்நாடகா அணைக் கட்டுவதை தடுக்க முயற்சிக்கவில்லை என்று தமிழக அரசின் மீது அந்த அறிக்கையில் திரு.கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக மேகதாது நீர்மின் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொள்வதாக 22.8.2013ல் பத்திரிகையில் செய்தி வந்ததை அடுத்து, இத்திட்டங்களை தமிழக அரசின் முன் அனுமதியின்றி எடுத்துக் கொள்ள வேண்டாமென கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கவும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு செயல்படும் வரை கர்நாடகத்தின் எந்த திட்டத்திற்கும் அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கும் படியும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கவும் கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை 2.9.2013 அன்று வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து, கர்நாடக தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் மத்திய நீர்வளத்துறை செயலாளர் அவர்களுக்கும் முறையே 6.9.2013 மற்றும் 17.9.2013 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இவற்றிற்கு, மத்திய நீர்வள அமைச்சகம் 7.10.2013 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில், சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒப்புதல் கோரி மத்திய நீர்வளக் குழுமத்திற்கு கர்நாடக அரசிடமிருந்து வரப்பெறவில்லை என தெரிவித்தது. இதே கருத்தை மத்திய நீர் ஆதார அமைச்சர், 18.11.2013 தேதியிட்ட நேர்முக கடிதத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு காணும்வரை இத்திட்டங்களை மேற்கொள்ளாதிருக்கும்படி கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கக் கோரி 9.10.2013 அன்று மத்திய அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும், கர்நாடக அரசு, மேகதாது நீர் மின்திட்டத்தையோ அல்லது மற்ற திட்டங்களையோ தன்னிச்சையாக நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் வழங்கக் கூடாது என்றும் ஏதாவது ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்குமாயின் அதனை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கோரி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகத்திற்கு 12.8.2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

கர்நாடக அரசு, காவேரி நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்துள்ள விளக்கம் கோரும் மனுவில், உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களான சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர்மின் திட்டங்கள் கர்நாடக எல்லைப்பகுதிக்குள்ளேயே உள்ளதால், அவைகளை கர்நாடக அரசே செயல்படுத்தலாமா என்பதை விளக்கும்படி கோரிக்கை வைத்துள்ளது. நடுவர் மன்றம் அதன் 5.2.2007–ம் நாளிட்ட இறுதி ஆணைக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு கோரியுள்ள விளக்கம் கோரும் மனுக்கள் மீது விசாரணையை இதுவரையில்

மேற்கொள்ளவில்லை. இத்தகைய நிலையில், கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் தெரிவித்துள்ள அறிக்கையில், காவேரி நீர்வளம் முழுவதும் கர்நாடகத்திற்கு சொந்தம் என்றும், அணைப்பகுதி கர்நாடக எல்லைக்குள் அமைய உள்ளதால், கர்நாடகம் இத்திட்டங்களை தமிழக அரசின் இசைவு பெறாமல் தன்னிச்சையாக கட்டிக்கொள்ளலாம் என்பது சரியானதல்ல. பன்மாநில நதிகளில் வரும் நீர் எந்த ஒரு மாநிலத்திற்கும் சொந்தமானதல்ல என்பது உச்ச நீதிமன்றத்தின் **22.11.1991–**ம் நாளிட்ட ஆணையில் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், காவேரி நதியானது ஒரு பன்மாநில நதி என்பதால், கீழ்ப்படுகை மாநிலமான தமிழ்நாட்டின் இசைவு பெறாமலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறாமலும் கர்நாடக அரசு எந்த புதிய திட்டத்தையும் மேற்கொள்ள இயலாது.

நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது, கர்நாடக அரசு, நீர்மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல் குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில் மேகதாது எனுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கென, தொழில்நுட்ப சாத்திய அறிக்கை தயார் செய்வதற்காக கேட்டுக்கொண்டுள்ள "விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)" செய்துள்ளது என செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்பிரச்சனையில் தலையிட்டு இத்தகைய கர்நாடக அரசின் நடவடிக்கையை நிறுத்திவைக்கவும், மற்றும் எந்த ஒரு பாசன, நீர்மின், நீரேற்றுப் பாசன திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்குமாறும், **12.11.2014** அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை நான் அனுப்பியுள்ளேன். மேலும், தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசின் எந்த ஒரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம், ஒப்புதல் அளிக்கக்கூடாது என அவ்வரசிற்கு அறிவுறுத்தும்படியும் அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கர்நாடக அரசின் செயல் குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து **18.11.2014** அன்று உச்சநீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனு தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இதில் குறிப்பாக, கர்நாடக அரசு குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் இரண்டு அணைகளைக் கட்ட உத்தேசித்துள்ளதற்கு தடையாணை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட உள்ளது. எனவே, இது குறித்து திரு.கருணாநிதி தமிழக அரசுக்கு எந்த ஒரு அறிவுரையையும் அளிக்க தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவேரி நதிநீர் பிரச்சனை என்றாலும், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சனை என்றாலும், ஈழத் தமிழர் பிரச்சனை என்றாலும், தமிழக மீனவர் பிரச்சனை என்றாலும், தமிழர்களின் நலன் காப்பதற்கும் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டுவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருபவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் செயல்பாட்டால், முல்லைப் பெரியாறு அணையில் தற்போது **141.35** அடி அளவிற்கு நீர் தேக்கப்பட்டுள்ளது. கர்நாடக அரசால் மேகதாதுவில் அணைகள் கட்ட விருப்பம் கோரும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது தொடர்பாகவும் போதிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழக அரசின் மீது குற்றம் சுமத்தி அறிக்கை

எதுவும் வெளியிடாமல் இருப்பதே தமிழக மக்களுக்கு திரு.கருணாநிதி செய்யக்கூடிய நன்மை என்பதை கூறி, இது போன்ற அறிக்கைகளை தமிழர்களுக்கு எதிராக கர்நாடகமும், கேரளமும் பயன்படுத்திடக் கூடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, 'நல்லது செய்தல் ஆற்றிராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற புறநானூற்றின் வரிகளின் படி நடந்து கொள்ள வேண்டும் என திரு.கருணாநிதியை கேட்டுக் கொள்கிறேன்.

ஓ.பன்னீர்செல்வம்
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**